1979 அக்டோபர் 31]

174. திருமங்கலம் நகராட்சி மன்றத்தில் அரிசனங்களுக்கு ஒரு இடமும், பெண்களுக்கென ஒரு இடமும் ஒதுக்கவும் திருமங்கலம் நகராட்சியை 20 வார்டுகளாகப் பிரிப்பது குறித்தும் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25.7.1979 ஆம் தேதியிடப்பெற்ற 1139-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்து 1973-74-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை) (பத்தாவது அறிக்கை).

21. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குறித்து 1974-75—ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை)(பதினோராவது அறிக்கை).

*வெட்டுத் தீர்மானங்கள் தனியே அனுப்பப் பெற்றுள்ளன.

## இணைப்பு I.

[459-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 56-க்கான விடையைக் காண்க]

விடை.

(அ) வீரிய ஒட்டுத் தென்னை சாகுபடி திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு (1978-79) சுமார் 30,000 வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள நவ்லக் பண்ணையிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளத்திலும் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் (1979—80) 35,000 கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) 18.1.1979 வரையில் தனி நபர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களுக்குக் கன்றுகளின் வளர்ச்சி, கையிருப்பிலுள்ள கன்றுகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கொண்டு கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. உதவி பயிர் நிபுணர் நவ்லாக் இந்த